[13th February 1958

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், சேலம் ஜில்லா விஸ்தீர்ணத்தில் மிக பெரிய ஜில்லாவாக இருக்கின்ற காரணத்தால், அங்கு கலாசாலை வசதிகள் அதிகமாக தேவைப்படுவதால் அங்கு கலாசாலைகளை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

MR. SPEAKER : இந்த கேள்வி மூலக்கேள்விக்கு சம்பந்தமில்லாதது.

Professional Colleges

* 100-B *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of applications received for admission into the Government Professional Colleges to undergo Pre-Professional and professional courses in Engineering, Medicine Agriculture, Veterinary Science, Law Dental Surgery, Pharmacy and Stockmen's Course in Government Veterinary College, Madras in 1957 ;

(*b*) the number of applications from candidates belonging to Scheduled Castes among them ; and

(*c*) the number of candidates selected and the number of Scheduled Caste candidates among them ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) A statement is placed on the table of the House[a].

SRI P. G. MANICKAM : ஸார், இன்ஜினியரிங் காலேஜ், மெடிக்கல் காலேஜ், அக்ரிகல்ச்சரல் காலேஜ் இவைகளுக்கு 24 விண்ணப்பங்கள் எடுக்கப்படாமல் இருக்கின்றன. என்ன காரணத்தால் எடுக்கப்படவில்லை என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவ்விதமொன்றுமில்லை என்று நினைக்கிறேன். இன்ஜினியரிங் படிப்பில் 52 விண்ணப்பங்களில் 48 பேர்களை எடுத்திருக்கிறார்கள். ப்ரி-ப்ரபஷனல் கோர்ஸில் 24 பேர்களில் 20 பேர்களை எடுத்திருக்கிறார்கள். மெடிக்கலில் 22 பேர்களில் எல்லோரையும் எடுத்திருக்கிறார்கள். ப்ரி-ப்ரபஷனல் கோர்ஸில் 52 பேர்களில் 41 பேர்களை எடுத்திருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : இன்று டாக்டர் அதிகமாக இல்லாத காரணத்தால் பல இடங்களிலும் ஆஸ்பத்திரிகள் மூடிக்கிடப்பதாக மந்திரி அவர்களே சில கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே மருத்துவக் கல்லூரிகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

MR. SPEAKER : The Hon. Minister cannot answer that question now. The hon. Member may put a separate question.

SRI N. R. THIAGARAJAN : ஸார், வைத்தியக் கல்லூரி, இன்ஜினீரிங் கல்லூரி முதலியவைகளில் மூன்றாவது கிளாசில் தேறினவர்கள் கூட ஆயிரக்கணக்காக வந்து எம்.எல்.ஏ.க்களை தொந்தரவு படுத்துகிறார்கள். ஆகவே முதல் வகுப்பில் சேறினவர்கள்தான் மனுச்செய்யலாம் என்று அரசாங்கம் நிபந்தனை போடுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் விண்ணப்பங்கூட போடுவதற்கு உரிமையில்லை என்று சொல்லமுடியாது. விண்ணப்பங்கள் போட்டுவிட்டால் அதன்பின் இடம் கிடைக்கவில்லையென்றாலும் விட்டு விடலாம். ஆகவே இந்த தொந்தரவுகள் எல்லாம் அதிகமாக காலேஜ் வந்தபிறகுதான் தீரும்.

MR. SPEAKER : Questions are over.

---

a Printed as Appendix III on page 380 infra.